WEB COPY



IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS

DATED : 12.06.2025

CORAM

THE HONOURABLE MR.JUSTICE **M.SUNDAR**
and
THE HONOURABLE MR.JUSTICE **HEMANT CHANDANGOUDAR**

**W.P.No.20183 of 2024**

Sri Dharmaraja Draupadiyamman Arakkattlai
rep. By its Managing Trustee K.Yogesh,
No.101, V.O.C. Street,
Thalvanayakkan Pettai,
Chengam Post and Taluk,
Thiruvannamalai District. - 606 701. ... Petitioner

Vs.

1.The Chief Engineer,
Water Resources Department,
Chennai Region.

2.The Executive Engineer,
Water Resources Department,
Chennai Region.

3.The Superintending Engineer (PWD),
Water Resource Department,
Pennaiyaru Vadikal Taluk,
Thiruvannamalai.

4.The Executive Engineer (PWD),
Water Resource Department,
Chengam – 606 701.



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



5.The Assistant Engineer (PWD),
Water Resource Department,
Pennaiyaru Vadikal Taluk,
Thiruvannamalai.

6.The District Collector,
Thiruvannamalai.

7.The Revenue Divisional Officer,
Revenue Department,
Thiruvannamalai.

8.The Commissioner,
H.R. & C.E.,
Nungambakkam, Chennai.

9.The Joint Commissioner,
H.R. & C.E.,
Thiruvannamalai.

10.The Assistant Commissioner,
H.R. & C.E.,
Thiruvannamalai.

11.The Executive Officer,
H.R. & C.E.,
Sri Thiroupathyamman Temple,
Chengam. ... Respondents

Writ Petition filed under Article 226 of The Constitution of India praying to issue a Writ of Mandamus directing respondents 1 to 7 herein to dispose of the representation of the petitioner Trust dated 10.01.2024 seeking the relief of converting the land situated in S.No.52/1B measuring 1 acre and 47 cents of land where the Sri Dharmaraja Thiroupathyamman Kovil at Chengam is situated, which



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



was wrongly classified as Eri Poramboke catchment area of Thokkakudi Lake by directing the respondents herein to form a committee to make necessary inspections jointly in pursuance of the reply sent by the fifth respondent in Ka.No.Ko.24/2024/U.Po/Chengam dated 26.04.2024 and to issue patta in favour of Sri Dharmaraja Thiroupathyamman Kovil, Chengam within the time frame fixed by this Court.

| | | |
|---|---|---|
| For Petitioner | : | Ms.R.T.Shyamala |
| For Respondents | : | Mr.M.S.Arasakumar,<br>Government Advocate<br>for R1 to R7<br>Mr.K.Karthikeyan,<br>Government Advocate<br>for R8 to R11 |

**ORDER**

[Order of the Court was made by **M.SUNDAR, J.**,]

This order will now dispose of captioned main 'Writ Petition' [hereinafter 'WP' for the sake of brevity].

2. This order has to be read in conjunction with and in continuation of earlier proceedings made in the listing on 24.07.2024, which reads as follows:



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



*'W.P.No.20183 of 2024*

***M.SUNDAR, J.,***
*and*
***K.GOVINDARAJAN THILAKAVADI, J.,***

***[Order of the Court was made by M.SUNDAR. J.,]***

*Captioned 'Writ Petition' {hereinafter 'WP' for the sake of brevity} has been filed seeking a mandamus qua a 'representation dated 10.01.2024 given by writ petitioner' {hereinafter 'said representation' for the sake of brevity}.*

*2. Ms.R.T.Shyamala, learned counsel on record for writ petitioner who is before us, adverting to said representation submits that a Temple which goes by name 'Arulmigu Sri Dharmaraja Draupadiyamman Temple' is situate in 'land admeasuring 1 acre 47 cents or thereabouts comprised in S.No.52/1B in Thokkavadi Village, Chengam Taluk, Tiruvannamalai District' {hereinafter 'said land' for the sake of brevity}.*

*3. Learned counsel submits that a notice dated 26.06.2022 was issued by jurisdictional Assistant Engineer of Public Works Department, WRO, Irrigation Division, Chengam earlier, this notice was assailed by way of a writ petition in W.P.No.13679 of 2023 and the same was disposed of by another Hon'ble Division Bench in and by an order dated 02.06.2023. A scanned reproduction of this 02.06.2023 order in W.P.No.13679 of 2023 is as follows:*



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



57

W.P.No.13679 of 2023

IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS

DATED: 02.06.2023

CORAM :

THE HON'BLE MR.SANJAY V.GANGAPURWALA, CHIEF JUSTICE

AND

THE HON'BLE MR.JUSTICE P.D.AUDIKESAVALU

W.P.No.13679 of 2023

1. K.Yogesh
2. G.Raja
3. J.Nandagopal
4. N.Balaraman
5. R.Mahadevan .. Petitioners

Vs.

1. The Commissioner
HR & CE Department
Nungambakkam, Chennai.

2. The Joint Commissioner
HR & CE Department
Thiruvannamalai.

3. The Thakkar/Executive Officer
Arulmigu Dharmaraja Throupathiamman Temple
Chengam.

4. The Superintendent Engineer
P.W.D. WRO
Pennaiyar Basin Circle
Thiruvannamalai.

Page 1 of 5

w.mhc.tn.gov.in/judis



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY





5. The Executive Engineer
PWD, WRO, Pennaiyar Basin Circle
Thiruvannamalai.

6. The Asst. Engineer
PWD, WRO, Irrigation Division
Chengam. .. Respondents

Prayer: Petition filed under Article 226 of the Constitution of India seeking issuance of a writ of Certiorarified Mandamus to call for the records in Form III, Rule 6(1) dated 26.06.2022 issued by the sixth respondent addressed to the third respondent and quash the same on the ground that Arulmigu Dharmaraja Thiroupathy Amman Kovil at Thokkavadi Village, Chengam Taluk, Thiruvannamalai District, a temple under the care and custody of the third respondent is in existence for more than 500 years and also direct 1 to 3rd respondents to protect the temple from any further threat of demolition in the future.

| | | |
|---|---|---|
| For the Petitioners | : | Ms.R.T.Shyamala |
| For the Respondents | : | Mr.NRR.Arun Natarajan<br>Special Government Pleader<br>for Respondents 1 to 3<br><br>Mr.J.Ravindran<br>Additional Advocate General<br>Assisted by Mr.A.Selvendran<br>Special Government Pleader<br>for Respondents 4 to 6 |

ORDER
(Made by the Hon'ble Chief Justice)

Heard Ms.R.T.Shyamala, learned counsel for the petitioners, Mr.NRR.Arun Natarajan, learned Special Government Pleader for the



://www.mhc.tn.gov.in/judis



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



67



respondents 1 to 3 and Mr.J.Ravindran, learned Additional Advocate General, assisted by Mr.A.Selvendran, learned Special Government Pleader for the respondents 4 to 6.

2. Learned Additional Advocate General, on instructions, makes a statement that the impugned notice would be withdrawn by the authority.

3. In view of the said statement, the grievance of the petitioners stand redressed. Accordingly, the writ petition stands disposed of. There will be no order as to costs. WMP No.13351 of 2023 filed by the petitioners to permit them to file a single writ petition is allowed, inasmuch as they have paid separate court-fee. WMP Nos.13355 and 13356 of 2023 are closed.

(S.V.G., CJ.) (P.D.A., J.)
02.06.2023

Index : Yes/No
Neutral Citation : Yes/No

kpl



://www.mhc.tn.gov.in/judis



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



*4. The prayer as set out in the order pertains to a notice under Rule 6(1) Form-III but the title of the Rules or Parent Act is not available.*

*5. Learned counsel for writ petitioner has not placed before us a copy of notice dated 26.06.2022 impugned in earlier writ petition i.e., W.P.No.13679 of 2023.*

*6. Faced with the above situation, learned counsel on record for writ petitioner sought time to file 26.06.2022 notice and writ affidavit thereat i.e., support affidavit in W.P.No.13679 of 2023 by way of additional typed set of papers and bring it on Board.*

*7. Considering the nature of the matter, facts and circumstances of the case, this request is acceded to.*

*8. List captioned matter under the cause list caption 'ADJOURNED ADMISSION' but in the Admission Board i.e., Motion List on Friday.*

*List on 26.07.2024.'*


3. The aforereferred proceedings captures the crux and gravamen of the matter as well as trajectory the matter has taken before us thus far.

4. Today, Ms.R.T.Shyamala, learned counsel for writ petitioner submits that an additional typed set of papers styled as 'Typed Set II' dated 26.07.2024 has been filed and draws our attention to a notice



https://www.mhc.tn.gov.in/judis

dated 26.06.2022 and a scanned reproduction of the same is as follows:



16

படிவம்- III

(விதி 6 (1) ஐ காண்க.)

திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் வட்டத்தில் [illegible] கிராமத்தில் சர்வே எண் 52/1B நில அளவை புல எண்களில் 0.06.0 ஹெக்டேர் பரப்பில் பொதுப்பணி துறையின் நீர்வள ஆதார துறைக்கு உரியதான [illegible] ஏரிக்கரை மற்றும் நீர்ப்பிடிப்பில் ஒரு பகுதியை தாங்கள் ஆக்கிரமித்து தங்கள் குடியிருக்கையில் [illegible] உள்ளீர் என உதவி பொறியாளர் ஆகிய நான் கருதுகிறேன். இந்த அறிவிப்பு கிடைக்கப்பெற்ற இருபத்தியொரு நாட்களுக்குள் கூறப்பட்டுள்ள துண்டு மற்றும் பகுதி நிலங்களில் தங்கள் ஆக்கிரமிப்பை அகற்றும்படி கோருகிறேன். தவறும்பட்சத்தில், நான் ஆக்கிரமிப்பை அகற்றிவிட்டு ஆக்கிரமிப்பை அகற்றுவதற்குண்டான செலவுத் தொகையை தங்கள் மீது விதிப்பேன். நிலப்பகுதியிலிருந்து அகற்றப்பட்டு வெளியேற்றப்படும் ஆக்கிரமிப்புகளுக்கு துறை எவ்வித பொறுப்பும் ஏற்காது.

இடம்: செங்கம்

நாள்: .2022

பெறுநர்:

[illegible]

[illegible] 26.06.22

உதவி பொறியாளர், [illegible]

பாசனப் பிரிவு,

செங்கம்.



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



5. To be noted, learned State counsel for 'Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Department' (hereinafter 'TNHR & CE Department' for the sake of convenience and clarity), who is representing R8 to R11 submits that TNHR & CE Department also is taking a stand that the land in which Sri Dharmaraja Thiroupathyamman Kovil at Chengam is situate has been erroneously classified as a waterbody.

6. In the light of the narrative thus far, we took up the captioned main WP with the consent of learned counsel on both sides in the Admission Board and we find that the captioned main WP can be disposed of by a simple order.

7. A scanned reproduction of the said representation (representation dated 10.01.2024) is as follows:



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



பதிவு எண் : CN5872/2022

67

SDDA

# ஸ்ரீ தர்மராஜா திரௌபதியம்மன் அறக்கட்டளை

ஸ்ரீ திரௌபதியம்மன் நகர், போளூர் சாலை, செங்கம் - 606701.

கௌரவ தலைவர்கள் : R. துரைசாமி 9943565973 | N. பலராமன் 8973037236 | G. பலராமன் 9751526648 | G. பெருமாள் 8680984390

நாள்: 10/01/24
இடம்: செங்கம்

அனுப்புனர்

K. யோகேஷ்
தலைவர்,
ஸ்ரீ தர்மராஜா திரௌபதியம்மன் அறக்கட்டளை (SDDA),
எண்: 101, வ.உ.சி தெரு, தளவநாயக்கன் பேட்டை,
செங்கம் (தாலுக்கா), செங்கம் – 606701.
திருவண்ணாமலை மாவட்டம், தமிழ்நாடு.
மற்றும் திருக்கோயில் குடிகள், பொது மக்கள்.

பெறுநர்

உயர்திரு. செயற்பொறியாளர் அவர்கள்,
நீவது (கூ/பொ),
மத்திய பெண்ணையாறு வடிநில உபகோட்டம்,
திருவண்ணாமலை – 606603.

நகல் பார்வைக்காக:

உயர்திரு. மாவட்ட ஆட்சியர், திருவண்ணாமலை.
உயர்திரு. கோட்டாட்சியர், வருவாய்த்துறை, திருவண்ணாமலை.
உயர்திரு. முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு மற்றும் தலைமைப் பொறியாளர், பொபது, சென்னை.
உயர்திரு. தலைமைப் பொறியாளர், பொபது, நீர்வள ஆதார அமைப்பு, சென்னை மண்டலம்.
உயர்திரு. கண்காணிப்புப் பொறியாளர், பொபது, நீர்வள ஆதார அமைப்பு, பெண்ணையாறு வடிநில வட்டம், திருவண்ணாமலை.

K. யோகேஷ் தலைவர் | J. நந்தகோபால் துணை தலைவர் | G. ராஜா செயலாளர் | R. ஜெகத்சன் பொருளாளர்

7305657316 | 9444457550 | 7550168522 | 9786150625 sddatrustchengam@gmail.com



https://www.mhc.tn.gov.in/judis

சத்யமேவ ஜயதே
WEB COPY



பதிவு எண் : CN5872/2022

SDDA

6468

# ஸ்ரீ தர்மராஜா திரௌபதியம்மன் அறக்கட்டளை

ஸ்ரீ திரௌபதியம்மன் நகர், போளூர் சாலை, செங்கம் - 606701.

கௌரவ தலைவர்கள்: R. துரைசாமி 9943565973 | N. பலராமன் 8973037236 | G. பலராமன் 9751526648 | G. பெருமாள் 8680984390

உயர்திரு. **செயற் பொறியாளர்**, பொபது, நீர்வள ஆதார அமைப்பு, மத்திய பெண்ணையாறு வடிநிலக் கோட்டம், திருவண்ணாமலை.
உயர்திரு. **செயற் பொறியாளர்**, பொபது, நீர்வள ஆதார அமைப்பு, குப்பநத்தம் நீர்த்தேக்கத் திட்டக் கோட்டம், செங்கம்.
உயர்திரு. **உதவிப் பொறியாளர்**, பொபது, நீஆஅ, பாசனப் பிரிவு, செங்கம்.
உயர்திரு. **ஆணையர்**, இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை.
உயர்திரு. **இணை ஆணையர்**, இந்து சமய அறநிலையத்துறை, தி.மலை.
உயர்திரு. **உதவி ஆணையர்**, இந்து சமய அறநிலையத்துறை, தி.மலை.
உயர்திரு. **செயல் அலுவலர்** (ஸ்ரீ திரௌபதியம்மன் ஆலயம், செங்கம்), இந்து சமய அறநிலையத்துறை, செங்கம்.
உயர்திரு. **செயல் அலுவலர்**, செங்கம் பேரூராட்சி, செங்கம்.

பொருள்: செங்கம் போளூர் சாலையில் அமைந்துள்ள, 1000-ம் ஆண்டுகள் பழமை வாய்ந்த ஸ்ரீ தர்மராஜா திரௌபதியம்மன் ஆலயத்தின் நிலத்தை களஆய்வு செய்து, வருவாய்த்துறை பதிவேட்டில் "ஏரி" நீர்நிலை பகுதி என்று தவறாக குறிப்பிட்டு வருவதை நீக்கி, திருக்கோயில் பெயரில் பட்டா வழங்கக் கோருதல் தொடர்பாக;

மதிப்புக்குரிய ஐயா,

நாங்கள், திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், தோக்காவாடி கிராமத்திற்கு உட்பட்ட, போளூர் சாலையில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ தர்மராஜா திரௌபதியம்மன் ஆலயத்தில் குடிகொண்டுள்ள "ஸ்ரீ தர்மராஜா திரௌபதி அம்மன்"-ஐ தலைமுறை தலைமுறையாக, சுமார் 1000-ம் ஆண்டுகளுக்கும் மேலாக குலதெய்வமாக வழிபட்டு வரும் கோயில்குடிகள். எங்கள் குலதெய்வத்தை, செங்கம் மற்றும் கள்ளக்குறிச்சி வட்டத்தை (செங்கம், கலசப்பாக்கம், திருவண்ணாமலை மற்றும் கள்ளக்குறிச்சி சட்டமன்ற தொகுதிகள்) சேர்ந்த சுமார் 53 கிராமங்களை சேர்ந்த, 15 வெவ்வேறு சமூகங்களை சேர்ந்த 5000-க்கும் மேற்பட்ட

K. யோகேஷ் தலைவர் | J. நந்தகோபால் துணை தலைவர் | G. ராஜா செயலாளர் | R. ஜெகதீசன் பொருளாளர்
7305657316 | 9444457550 | 7550168522 | 9786150625
sddatrustchengam@gmall.com



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



பதிவு எண் : CN5872/2022

65
69

SDDA

# ஸ்ரீ தர்மராஜா திரௌபதியம்மன் அறக்கட்டளை

ஸ்ரீ திரௌபதியம்மன் நகர், போளூர் சாலை, செங்கம் - 606701.

கௌரவ தலைவர்கள் R.துரைசாமி 9943565973 | N.பலராமன் 8973037236 | C.பலராமன் 9751526648 | C.பெருமாள் 8680984390

குடும்பங்கள் வழிபட்டு வருகின்றனர். இதைத் தவிர்த்து, இந்த கோயில் பழமையான மற்றும் தொன்மையான கோயில் என்பதால், இந்து சமயத்தை பின்பற்றும் பல்லாயிரக்கணக்கான பொது மக்களும், எங்கள் அம்மனை வழிப்பட்டு வருகின்றனர். எங்களது குலதெய்வ கோயிலானது, இந்து சமய அறநிலையத்துறையின் மேற்பார்வையில் (பதிவு எண்: TM024451) உள்ள இந்து சமய வழிபாட்டுத் தலமாகும்.

எங்களின் குலதெய்வக்கோயிலானது, செங்கம் வட்டம், தோக்காவாடி கிராம எண்: 10 பிளாக் 14-ல், போளூர் சாலைக்கு மேற்கு பக்கம் சர்வே எண்: 52/1B-யில் 1.47 ஏக்கரில் அமைந்துள்ளது. மேலும், இந்த கோயிலுக்கு சொந்தமாக, சர்வே எண்: 151/1-ல் 1.34 ஏக்கர் நிலம், பட்டாவுடன் உள்ளது. அந்த பட்டாவானது ஆங்கிலேயர் காலத்திலேயே வழங்கப்பட்டுள்ளது. இது, இந்த ஆலயம் பல ஆண்டுகளுக்கும் மேலாக மேற்குறிப்பிட்ட சர்வே எண்: 52 /1B-ல் இருந்து வருகிறது என்பதற்கு மேலும் ஒரு சான்றாகவும் உள்ளது. இந்த சர்வே எண்: 52/1B திருக்கோயில் இடத்திலுள்ள 2 இராஜ புளியமரங்கள் மற்றும் 10 புளியமரங்களை, இந்து அறநிலையத்துறை மற்றும் வருவாய்த்துறையினர் வருடா வருடம் பல ஆண்டுகளாக ஏலம் விட்டு வருவாய் ஈட்டி வருகின்றனர்.

மேலும், கால வளர்ச்சியினால் இந்த திருக்கோயில் இடத்தினைச் சுற்றி மூன்று புறமும், சர்வே எண்கள்: 43 (மேற்கு), 50 (வடமேற்கு) மற்றும் 49 (வடக்கு) திசைகளில், பட்டா வழங்கப்பட்டு வீடுகள் கட்டப்பட்டும் உள்ளது. மேலும், இத்திருக்கோயிலின் தெற்கு மற்றும் கிழக்கு திசைகளில் சர்வே எண்: 52/18-ல் STATE HIGHWAYS ROAD (SH133)-ம் செல்கிறது.

K.யோகேஷ் தலைவர் | J.நந்தகோபால் துணை தலைவர் | C.ராஜா செயலாளர் | R.ஜெகதீசன் பொருளாளர்

7305657316 | 9444457550 | 7550168522 | 9786150625   sddatrustchengam@gmail.com



https://www.mhc.tn.gov.in/judis


WEB COPY



# ஸ்ரீ தர்மராஜா திரௌபதியம்மன் அறக்கட்டளை

ஸ்ரீ திரௌபதியம்மன் நகர், போளூர் சாலை, செங்கம் - 606701.

கௌரவ தலைவர்கள்: R.துரைசாமி 9943565973 | N.பலராமன் 8973037236 | G.பலராமன் 9751526648 | G.பெருமாள் 8680984390




நீர்வள ஆதாரம் மற்றும் நீர் பிடிப்பிற்கும், இந்த திருக்கோயிலின் நிலத்திற்கும் எந்த ஒரு தொடர்பும் இல்லை. அப்படி இருக்கையில், மத்தியில் உள்ள சர்வே எண்: 52/18-யில் இருக்கும் ஸ்ரீ தர்மராஜா திரெளபதியம்மன் கோயில் இடத்திற்கு மட்டும் பட்டா வழங்காமல், தொடர்ந்து "ஏரி" பகுதி என்று வருவாய்த்துறை ஏட்டில் உள்நோக்கத்துடன் தொடர்ந்து நீடித்து வருவது எங்களுக்கு மிகவும் வருத்தமும், வேதனையும் அளிக்கிறது.

சுமார் 1000-ம் ஆண்டுகளுக்கும் மேலாக, இக்கோயிலில் உள்ள எங்கள் குலதெய்வம் "ஸ்ரீ தர்மராஜா திரெளபதி" அம்மனுக்கு ஆண்டு தோறும் ஆடி மாதத்தில் "ஸ்ரீ வசந்த உற்சவ தீ மிதி திருவிழா" தவறாமல் வெகு விமர்சையாக நடத்தி வருகிறோம்.

K.யோகேஷ் தலைவர் | J.நந்தகோபால் துணை தலைவர் | G.ராஜா செயலாளர் | R.ஜெகதீசன் பொருளாளர்

7305657316 | 9444457550 | 7550168522 | 9786150625

sddatrustchengam@gmail.com



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY

பதிவு எண் : CN5872/2022

SDDA

# ஸ்ரீ தர்மராஜா திரௌபதியம்மன் அறக்கட்டளை

ஸ்ரீ திரௌபதியம்மன் நகர், போளூர் சாலை, செங்கம் - 606701.

கௌரவ தலைவர்கள் : R. துரைசாமி 9943565973 | N. பலராமன் 8973037236 | G. பலராமன் 9751526648 | C. பெருமாள் 8680984390

மேலும், இந்த திருவிழாவின் போது பல்லாயிரக்கணக்கான பக்தர்களும், மற்றும் ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி நாள் பூஜையின் போது நூற்றுக்கணக்கான பக்தர்களும் இத்திருக்கோயிலுக்கு வந்து தரிசித்து செல்கின்றனர்.

இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான திருக்கோயில் சுற்றியுள்ள இடத்தில், துரியோதனன் படுகளம் செய்யும் இடம், மக்கள் பொங்கல் வைக்கும் இடம், பாஞ்சாலி நாடகம் நடைபெறும் இடம், அன்னதானம் செய்யும் இடம், தீ மிதிக்கும் இடம், பக்தர்கள் தீ மிதித்து சுற்றிவரும் பாதை மற்றும் கோயில்குடிகள் வாகனங்கள் நிறுத்தும் இடம் போன்றவை சுமார் 1000-ம் ஆண்டுகளுக்கும் மேலாக பயன்பாட்டில் இருந்து வருகிறது. இப்படி இருந்தும், பலமுறை நாங்களும், இந்து அறநிலையத்துறையும் தங்களிடம் முறையிட்டும், 1000-ம் ஆண்டுகள் பழமை வாய்ந்த ஸ்ரீ தர்மராஜா திரௌபதியம்மன் ஆலயத்தின் இடத்திற்கு களஆய்வு செய்து "பட்டா" வழங்காமல் இருப்பதால், இதையே காரணமாக கருதி நான்கு பேர் குடிசைகள் போட்டு இத்திருக்கோயிலின் இடத்தை ஆக்கிரமித்துள்ளனர்.

மேலும், இத்திருக்கோயிலுக்கும், திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கும் தொந்தரவு அளிக்கும் வகையில், கோயில் இடத்தில் மாமிச கழிவுகள் மற்றும் குப்பைகள் கொட்டுவதும், கைப்பந்து மற்றும் மட்டைப்பந்து விளையாட்டுகள் விளையாடி கோயில் சிலைகள் மற்றும் சுவர்களை சேதப்படுத்துவதும், திருக்கோயில் இடத்தை வழிபாட்டிற்கு பயன்படுத்த முடியாத வகையில் லாரி, கார், மினி பஸ் மற்றும் லோடு வண்டிகளை நிறுத்தி தொந்தரவு செய்வதுமாக, சில பொறுப்பற்ற சமூக விரோதிகள் செய்து வருகின்றனர். சிலர், இரவு நேரங்களில் இத்திருக்கோயிலின் இடத்தில் மது அருந்துவது மற்றும் சமூக விரோத செயல்களில் ஈடுபட்டும், உடைந்த பாட்டில்கள் மற்றும் குப்பைகளை வீசிச் செல்கின்றனர். இதனை விசாரிக்கும் கோயில் குடிகள் மற்றும் பொது மக்களிடம் வாக்குவாதத்தில் ஈடுபடுகின்றனர்.

1000-ம் வருடங்களுக்கு மேலான, புராதனமான 52/1B-ல் உள்ள ஸ்ரீ தர்மராஜா திரௌபதியம்மன் ஆலயத்தை, வருவாய்துறையின் அ-பதிவேட்டில் "ஏரி" அரசு புறம்போக்கு என்று தவறுதலாக தொடர்ந்து பல ஆண்டுகளாக குறிப்பிட்டு வருவதால், பொதுப்பணித்துறை எங்களின் குலதெய்வ

K. யோகேஷ் தலைவர் | J. நந்தகோபால் துணைத்தலைவர் | G. ராஜா செயலாளர் | R. ஜெகதீசன் பொருளாளர்

7305657316 | 9444457550 | 7550168522 | 9786150625    sddatrustchengam@gmail.com



https://www.mhc.tn.gov.in/judis

SDDA

# ஸ்ரீ தர்மராஜா திரௌபதியம்மன் அறக்கட்டளை

ஸ்ரீ திரௌபதியம்மன் நகர், போளூர் சாலை, செங்கம் - 606701.

கௌரவ தலைவர்கள் : R. துரைசாமி 9943565973 | N. பலராமன் 8973037236 | C. பலராமன் 9751526648 | G. பெருமாள் 8680984390

கோயிலை ஆக்கிரமிப்பாக கருதி, இத்திருக்கோயிலை அப்புறப்படுத்த 26.06.2022 அன்று நோட்டீஸ் ஒட்டியது. அதை எதிர்த்து, கோயில் குடிகள் மற்றும் பொது மக்கள் சார்பாக சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு (W.P.No.13679 of 2023) தொடரப்பட்டு, மாண்புமிகு நீதியரசர் திரு. ஆதிகேசவலு அவர்களால் "1000-ம் ஆண்டுகள் பழமை வாய்ந்த ஸ்ரீ தர்மராஜா திரௌபதியம்மனின் ஆலயத்தை அகற்ற பொதுப்பணித்துறைக்கு எந்தவித அதிகாரமும் இல்லை என்றும், அதை அகற்ற ஒட்டப்பட்ட பொதுப்பணித்துறையின் நோட்டீஸ் செல்லாது" என 02.06.2023 அன்று தீர்ப்பளிக்கப்பட்டது.

ஆகவே, இந்த கோயிலானது 5000-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் குலதெய்வமாக வழிபடும் இந்து சமயத்தலம் என்பதையும், தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினால் ஆராய்ச்சி செய்து 500 ஆண்டுகளுக்கும் மேலான புராதன கோயில் என்று சான்று அளித்ததை கருத்தில் கொண்டும், சென்னை உயர்நீதி நீதிமன்றம் வழக்கு விசாரணையின் போது "பொதுப்பணித்துறை வருவதற்கு முன்பே இந்த புராதன கோயிலானது இருந்து வந்துள்ளது, ஆகவே இந்த கோயிலையும் கோயிலின் நிலப்பகுதியையும், பொதுப்பணித்துறை உரிமை கொண்டாடி அகற்ற முடியாது" என்பதை கூறி, அவர்களின் நோட்டீஸ் செல்லாது என்று தீர்ப்பளித்துள்ளதை கருத்தில் கொண்டும், புராதன கோயிலை காப்பது அரசு அதிகாரிகள் மற்றும் அரசாங்கத்தின் கடமை என்பதை கருத்தில் கொண்டும், சர்வே எண்: 52/1B-ல் 1.47 ஏக்கரில், சுமார் 1000-ம் ஆண்டுகளுக்கும் மேலாக இத்திருக்கோயில் அமைந்துள்ளதையும், கோயில் குடிகள் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளதை என்பதை கருத்தில் கொண்டும், ஏற்கனவே இந்த கோயிலுக்கு சொந்தமான நிலத்தை அளந்து தருமாறு, இந்து சமய அறநிலையத்துறை செயல் அலுவலர் திருமதி.உ.சத்தியா அவர்களால் 20.10.2020 அன்று வழங்கப்பட்ட மனுவை கருத்தில் கொண்டும், கடந்த பல வருடங்களாக, திருக்கோயில் குடிகள் மற்றும் பொதுமக்களின் சார்பாக "ஸ்ரீ தர்மராஜா திரௌபதியம்மன்" ஆலயத்தின் இடத்தை அளந்து "பட்டா" வழங்குமாறு அளித்த எண்ணற்ற மனுக்களை கருத்தில் கொண்டும், சர்வே எண்: 52/1B-ல் உள்ள ஸ்ரீ தர்மராஜா திரௌபதியம்மன் ஆலயம் மற்றும் ஆலயத்தின் இடத்தை களஆய்வு செய்து, இத்திருக்கோயிலின் இடம் எந்த வகையிலும் நீர்ப்பிடிப்பு பகுதியில் இல்லை என்பதை அறிந்து, கோயில் குடிகள்,

K. யோகேஷ் தலைவர் | J. நந்தகோபால் துணை தலைவர் | G. ராஜா செயலாளர் | R. ஜெகதீசன் பொருளாளர்

7305657316 | 9444457550 | 7550168522 | 9786150625 sddatrustchengam@gmail.com



https://www.mhc.tn.gov.in/judis

सत्यमेव जयते
WEB COPY



பதிவு எண் : CN5872/2022

SDDA

# ஸ்ரீ தர்மராஜா திரௌபதியம்மன் அறக்கட்டளை

ஸ்ரீ திரௌபதியம்மன் நகர், போளூர் சாலை, செங்கம் - 606701.

கௌரவ தலைவர்கள் R. துரைசாமி 9943565973 | N. பலராமன் 8973037236 | C. பலராமன் 9751526648 | C. பெருமாள் 8680984390

பொதுமக்கள் மற்றும் எதிர்கால சந்ததியினரின் வழிபாட்டு உரிமையை கருத்தில் கொண்டும், அனைவருக்கும் பயன்படும் வகையில் திருக்கோயிலை காக்கும் பொருட்டு, வருவாய்த்துறை பதிவேட்டில் தொடர்ந்து தவறுதலாக "ஏரி" அரசு பொறம்போக்கு என்று தொடர்ந்து குறிப்பிட்டு வருவதை திருத்தி, திருக்கோயிலின் பெயரில் "பட்டா" வழங்கி வழிவகை செய்யுமாறு நம்பிக்கையுடனும், பணிவன்புடனும் கேட்டுக்கொள்கிறோம்.

பிற சமய வழிபாட்டுத்தளத்தில் அத்து மீறுவது, ஆக்கிரமிப்பு செய்வது, வழிபாட்டு உரிமையை தடுப்பது மற்றும் வாக்குவாதத்தில் ஈடுபடுவது, இந்திய தண்டனை சட்டம் (Indian Penal Code) 295, 295A, 296, 297 மற்றும் 298 படி குற்றம் என்பதை கருத்தில் கொண்டும், இந்த திருக்கோயிலின் இடத்திற்கு "பட்டா" வழங்குவதன் மூலம், திருக்கோயிலைச் சுற்றி சுற்றுச்சுவர் அமைத்து, இந்த அத்துமீறல்களை தடுக்கலாம் என்பதையும் கருத்தில் கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

கையொப்பம்

For SHRI DHARMARAJA DRAUPADIYAMMAN ARAKKATTALAI
R. No:CN5872/2022
Managing Trustee

K. யோகேஷ்
தலைவர்,
ஸ்ரீ தர்மராஜா திரௌபதியம்மன் அறக்கட்டளை (SDDA)
மற்றும் திருக்கோயில் குடிகள், பொது மக்கள்.

**இந்த மனுவுடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்கள்:**

1. சென்னை உயர் நீதிமன்ற தீர்ப்பாணை
2. தொல்பொருள் ஆராய்ச்சித்துறை சான்று
3. புல எண் 52/1B நில வரைபடம்

K. யோகேஷ் தலைவர் | J. நந்தகோபால் துணை தலைவர் | C. ராஜா செயலாளர் | R. ஜெகதீசன் பொருளாளர்

7305657316 | 9444457550 | 7550168522 | 9786150625
sddatrustchengam@gmall.com



https://www.mhc.tn.gov.in/judis

SDDA

# ஸ்ரீ தர்மராஜா திரௌபதியம்மன் அறக்கட்டளை

14

ஸ்ரீ திரௌபதியம்மன் நகர், போளூர் சாலை, செங்கம் - 606701.

கௌரவ தலைவர்கள் R.துரைசாமி 9943565973 | N.பலராமன் 8973037236 | G.பலராமன் 9751526648 | C.பெருமாள் 8680984390

4. சர்வே எண்கள்: 43 (மேற்கு), 50 (வடமேற்கு) மற்றும் 49 (வடக்கு) FMB Maps
4. சர்வே எண் 52 பழைய வரைபடம்
5. பழைய அடங்கல் கணக்கு மற்றும் மரப்பட்டா பதிவேடுகள் (3)
6. அ-பதிவேடு நகல்கள்
7. திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலத்தின் ரியத்துவாரி பட்டா (ச. எண்: 151/1)
8. திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலத்தின் பட்டா (ச. எண்: 151/1)
9. கோயிலுக்கு சொந்தமான இடத்தினை அளவீடு செய்து தர, இந்து அறநிலையத்துறை ஆய்வாளரால் 20.10.2020-ல் வருவாய்துறைக்கு தந்த மனு
10. Google Map-ல் திருக்கோயிலின் இருப்பிடம்
11. இத்திருக்கோயில், இந்து சமய அறநிலையத்துறையின் மேற்பார்வையில் (பதிவு எண்: TM024451) உள்ள இந்து சமய வழிபாட்டுத் தளம் என்பதிற்கான சான்று
12. திருக்கோயிலில் ஆண்டுதோறும் ஆடி மாதத்தில் நடைபெறும் "ஸ்ரீ வசந்த உற்சவ தீ மிதி திருவிழா" அழைப்பிதழ்

குறிப்பு:
இத்துடன் திருக்கோயில் குடிகள் மற்றும் ஊர் பொதுமக்கள் விருப்ப கையொப்பங்களும் இணைக்கப்பட்டுள்ளது.

K.யோகேஷ் தலைவர் | J.நந்தகோபால் துணை தலைவர் | G.ராஜா செயலாளர் | R.ஜெகதீசன் பொருளாளர்

7305657316 | 9444457550 | 7550168522 | 9786150625 sddatrustchengam@gmall.com



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



8. The aforereferred representation shall now be treated as representation from R11 who represents said temple. We direct R6 [District Collector, Thiruvannamalai] to consider the representation inter-alia by having a survey conducted by the revenue officials and after giving an opportunity to all concerned. After considering the representation in this manner, R6 shall make a speaking order and the said order would be served on all concerned including writ petitioner and R11 within seven working days from the date of making of the order and the order shall be made in this manner as expeditiously as the business of R6 permits but in any event within fourteen weeks from today i.e., on or before 18.09.2025.

9. Captioned WP is disposed of in the aforesaid manner. There shall be no order as to costs.

**(M.S.,J.)** **(H.C.,J.)**
12.06.2025

Index : Yes / No
Neutral Citation : Yes / No
mmi

To

1.The Chief Engineer,
Water Resources Department,



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



Chennai Region.

2.The Executive Engineer,
Water Resources Department,
Chennai Region.

3.The Superintending Engineer (PWD),
Water Resource Department,
Pennaiyaru Vadikal Taluk, Thiruvannamalai.

4.The Executive Engineer (PWD),
Water Resource Department,
Chengam – 606 701.

5.The Assistant Engineer (PWD),
Water Resource Department,
Pennaiyaru Vadikal Taluk,
Thiruvannamalai.

6.The District Collector,
Thiruvannamalai.

7.The Revenue Divisional Officer,
Revenue Department,
Thiruvannamalai.

8.The Commissioner,
H.R. & C.E.,
Nungambakkam, Chennai.

9.The Joint Commissioner,
H.R. & C.E.,
Thiruvannamalai.

10.The Assistant Commissioner,
H.R. & C.E.,
Thiruvannamalai.

11.The Executive Officer,
H.R. & C.E.,



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



Sri Thiroupathyamman Temple,
Chengam.

**M.SUNDAR, J.,**
**and**
**HEMANT CHANDANGOUDAR, J.,**

mmi

**W.P.No.20183 of 2024**

**12.06.2025**



https://www.mhc.tn.gov.in/judis